பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆவணி 31 திங்கட்கிழமை (17.09.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 291

# இலங்கைக்கான இராணுவ உதவியை நிறுத்துவதற்கு அமெரிக்கா முஸ்தீபு!

## செனெட் தீர்மானத்தை நாடாளுமன்று அங்கீகரிக்கும்?

வாஷிங்ரன்,செப்ரெம்பர்17

இலங்கையில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் குறித்து சீற்றமடைந்துள்ள அமெரிக்கா, அதன் காரணமாக இலங்கைக்கான படைத்துறை உதவிகளை நிறுத்துவதற்குத் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான தீர்மானம் ஒன்று அமெரிக்க செனெட் சபையில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. செனெட் தீர்மானத்துக்கு ஒத்ததான முடிவை அமெரிக்க நாடாளுமன்றமும் விரைவில் எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அப்படியாகி, அதற்கு அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும் ஒப்புதல் அளிப்பாராயின், இலங்கை அரசின் நிலைமை மிகமோசமாகப் பாதிக்கப்படும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

செனெட்டின் புதிய தீர்மானப்படி -

இலங்கையில் இடம்பெறும் மோசமான மனித உரிமை மீறல்களைக் கண்காணிப்பதற்கு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் களமுனை அலுவலகத்தை இலங்கையில் திறக்க அனுமதிக்கவும் -

இலங்கையில் இடம்பெற்றுவரும் நீதிக்கு புறம்பான கொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்குக் காரணமானவர்களையும் நீதிக்கு முன்பாக நிறுத்தவும் -

இலங்கை அரசு காத்திரமான நடவடிக்கை எடுத்துள்ளது என அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் உறுதிப்படுத்தும் வரை இலங்கைக்கான படைத்துறை உதவிகளை அமெரிக்கா நிறுத்தும்.

2008ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின் வரைவில் உள்ள 690 ஆவது பிரிவின் பிரகாரம் இந்தத் தீர்மானம் கடந்த வாரம் அமெரிக்காவின் செனேட் சபையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் செனெட்டின் தீர்மானம் கடந்த வாரம் நிறைவேற்றப்பட்டுள்ள போதும், நாடாளுமன்றத்தில் அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

எனினும் 690ஆவது சரத்து தொடர்பான

(08ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு பூகம்ப அபாயம் உண்டாம்

சென்னை,செப்.17

இலங்கையில் விரைவில் பெரிய அளவில் பூகம்பம் ஏற்பட்டு பேரழிவு ஏற்படக்கூடும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

கடந்த 2004ஆம் ஆண்டு இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவில் ஏற்பட்ட பூகம்பத்தை தொடர்ந்து ஆழிப்பேரலை ஏற்பட்டு 16 நாடுகளில் பேரழிவை ஏற்படுத்தியது. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் பலியானார்கள்.

இதையடுத்து இந்தோனேசியாவில் அடிக்கடி நில நடுக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. கடந்த 12ஆம் திகதி முதல் தொடர்ந்து 3 நாள்கள் இந்தோனேசியாவின் சுமாத்திராவில் நிலநடுக்கம் ஏற்பட்டு 19 பேர் பலியாகிவிட்டனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கை மீண்டும் இணைக்க இந்தியத் தரப்பு இராஜதந்திர வியூகம்?

கொழும்பு,செப்.17

உயர் நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் வெவ்வேறாக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாணங்களை மீண்டும் இணைக்க வைக்கும் முயற்சியாகத் தனது இராஜதந்திர எத்தனங்களை இந்தியா ஆரம்பித்திருக்கிறது.

- இவ்வாறு பிரபல சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

வடக்கு - கிழக்கை மீண்டும் இணைக்க வைக்கும் ஏற்பாட்டைச் செய்ய வைப்பதற்காகவே இலங்கையின் பல தரப்பு அரசியல் பிரமுகர்களையும் இந்தியா, புதுடில்லிக்கு அழைத்துப் பேச்சு நடத்துகின்றது என்ற சாரப்பட்ட அந்தச் செய்தி பிரசுரமாகியிருக்கின்றது.

வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்ட முறைமை தவறு எனத் தனது தீர்ப்பில் கூறியுள்ள உயர்நீதிமன்றம், நாடாளுமன்றம் சட்டப்படி அந்த இணைப்பைச் செய்ய முடியும் என்று சுட்டிக்காட்டியிருந்ததும் தெரிந்ததே.

அவ்வாறு சட்டப்படியாக இணைப்பை மேற்கொள்ள வைக்கும் இராஜதந்திர எத்தனங்களையே இந்தியா மேற்கொள்கின்றது என அச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பாக அச் செய்தியில் மேலும் கூறப்பட்டவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழக அரசு ஊடாக இந்திய மத்திய அரசுக்கு மேற்கொண்ட அழுத்தத்தின் பேரிலேயே இந்தியா இதில் தலையிட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களை

(08ஆம் பக்கம் பார்க்க)

## இயலுமானால் வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடித்துக் காட்டுங்கள் பார்ப்போம்!

### எதிர்க்கட்சிக்குச் சவால் விடுகிறார் ஜனாதிபதி

கொழும்பு,செப்.17

"புதிய வரவு -செலவுத் திட்டத்தை எவராலும் தோற்கடிக்க முடியாது. முடிந்தால் தோற்கடித்துக் காட்டட்டும்"

-இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சிக்கு சவால் விடுத்திருக்கின்றார்.

நேற்று மாலை கேகாலை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுக்கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்க்கட்சியைப் போன்று இரு பக்கத்திற்கும் சார்ந்து செயற்படும் உறுப்பினர்கள் எம்மிடம் இல்லை. எமது அரசை எதிர்வரும் வரவு-செலவு திட்டத்தின்போது கவிழ்க்கப்போகின்றனர் என்றுஎதிர்க்கட்சியினர் கூறி வருகின்றனர். முடிந்தால் எமது அரசை வீழ்த்துங்கள் பார்ப்போம் என்று இந்த இடத்தில் இருந்து சவால் விடுகின்றேன்.

வரவு - செலவுத் திட்டத்தின்போது எமது

(08ஆம் பக்கம் பார்க்க)

## கே.பியை கைது செய்யச் சென்ற குழு வெறுங்கையுடன் திரும்பி வந்ததாம்

கொழும்பு,செப். 17

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினரான குமரன் பத்மநாதன் தாய்லாந்தில் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும், அவரை இலங்கைக்குக் கொண்டுவரப் போகின்றோம் எனக் கூறிக்கொண்டு தாய்லாந்து சென்ற அரச அதிகாரிகள் குழு வெறும் கையுடன் திரும்பியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கொழும்பிலிருந்து வெளிவரும் வார ஏடு ஒன்று தெரிவித்துள்ளதாவது-

தாய்லாந்தில் கைது செய்யப்பட்ட பீற்றர் இப்ராகீம் என்ற நபரை பத்மநாதன் எனக் கருதி அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பாங்கொங் போஸ்ற், ஏசியன் றிபூன், இலங்கை பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளம் ஆகியன செய்தி வெளியிட்டிருந்தன.

(08ஆம் பக்கம் பார்க்க)

## விமானம் வீழ்ந்து இரண்டாகப் பிளந்தது! தாய்லாந்து விபத்தில் 68 பேர் பலி!!

பாங்கொக்,செப்.17

தாய்லாந்தில் பயணிகள் விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் 68 பேர் உயிரிழந்தனர். 19 பேருக்கு என்ன நடைபெற்றது என்பது தெரியவரவில்லை. 40 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாய்லாந்து, புக்கட் தீவில் உள்ள விமான நிலையத்தில், விமானம் தரை இறங்கும் போது இந்தக் கோர விபத்து நிகழ்ந்ததாக தாய்லாந்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடுங்காற்றுடன் கூடிய மழை பெய்து கொண்டிருந்த வேளை, விமானம் தரையிறக்கப்பட்டது. அப்போதே, விமானம் பாதையை விட்டு விலகிச் சென்று விபத்துக்குள்ளாகியது என்று, அறிவிக்கப்பட்டுள்ளது.

மழை மற்றும் பலத்த காற்றுக் காரணமாக விமானம் நிலைகுலைந்தது. இதையடுத்து புக்கட் விமான நிலையத்தில் தரையிறங்க முயன்றபோது ஓடுதளத்தின் மீது வீழ்ந்து இரண்டாகப் பிளந்து தீப்பிடித்து எரிந்தது.

123 பயணிகளுடன் பாங்கொக்கிலிருந்து

(08ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருள் அனுப்ப 7 மாதங்களுக்கு முன்பே பிரதமர் அனுமதி

### மத்திய அரசு துரோகம் செய்துவிட்டது

சென்னை, செப்.17

ஈழத்தமிழருக்கு மருந்து மற்றும் உணவுப் பொருள்களை அனுப்ப ஏழு மாதங்களுக்கு முன்பே பிரதமர் ஒப்புதல் அளித்தும், தற்போது வரை அதை அனுப்ப மத்திய அரசு மறுத்தது ஏன் என்று ம.தி.மு.க. பொது செயலாளர் வைகோ கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகம் என்றும் மத்திய அரசு மீது அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

வடசென்னை ம.தி.மு.க. சார்பில், சென்னை புரசைவாக்கத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே இவ்வாறு குற்றம் சாட்டினார்.



செஞ்சிலுவை சர்வதேசக் குழு மூலம் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு உணவு மற்றும் மருந்தை அனுப்புவதற்கு வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் அனுமதி

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# படையினருக்கு 6,000 வீடுகளை நிர்மாணிக்க 800 கோடி ரூபா!

## 4 வங்கிகளிடம் இருந்து பெற அரசு முடிவு

கொழும்பு,செப்.17

முப்படையினருக்கும் ஆறாயிரம் வீடுகளை நிர்மாணித்து வழங்கும் திட்டத்துக்கு தலா இருநூறு கோடி ரூபா வீதம் எண்ணூறு கோடி ரூபாவை வழங்கும்படி நான்கு அரச வங்கிகளுக்கு கடந்த வாரம் மத்திய வங்கி எழுத்து மூலம் அறிவித்திருக்கின்றது.

இது தொடர்பாக மக்கள் வங்கி, இலங்கை வங்கி, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றுக்கு மத்திய வங்கி ஆளுநரின் கையொப்பத்துடன் கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது.

மேற்படி வங்கியின் நிதி முதலீட்டின் கீழ் நிர்மாணிக்கப்படும் இந்த வீட்டுத்திட்டத்தின் வீடுகள் முப்படையினருக்கும் விற்கப்படும்.

அவற்றைக் கொள்வனவு செய்வதற்காக படையினருக்கு தலா பத்து லட்சம் ரூபா வரையில் கடன் வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கடனுக்காக வங்கிகள் 13 வீத வட்டியை அறவிடவுள்ளன.

ஆயினும், படையினரிடமிருந்து அரசு 6 வீத வட்டியை மாத்திரம் அறவிடும். மிகுதி 7 வீதத்தையும் அரசு, சம்பந்தப்பட்ட வங்கிகளுக்குச் செலுத்தும்.

இந்த வீட்டுத்திட்டம் ரஜரட்ட பிரதேசத்தில் அமைக்கப்படும். இது சம்பந்தப்பட்ட வங்கி நிதியை, நிதி அமைச்சினூடாகவே இத்திட்டத்திற்குப் பயன்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது - என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## நவாலி விவசாய சம்மேளனத்தின் காலபோக கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.17

நவாலி விவசாயிகள் சம்மேளனத்தின் பொதுக் கூட்டமும் காலபோகக் கலந்துரையாடலும் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளன.

சம்மேளனத் தலைவர் வே.சிற்றம்பலம் தலைமையில் முற்பகல் 10மணிக்கு நவாலி வை.எம்.சீ.ஏ மண்டபத்தில் கூட்டம் இடம் பெறும்.

சண்டிலிப்பாய் பெரும்பாக அதிகாரி வை.பாலகிருஷ்ணன் பிரதம அதிதியாகவும், நவாலி வடக்கு, நவாலி தெற்கு, நவாலி கிழக்கு, கிராம அலுவலர்கள் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

மேற்படி கூட்டத்தில் விதைநெல், உரவிநியோகம், கட்டாக்காலிகளின் தொல்லை குறித்து ஆராயப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து -

நவாலி விவசாயிகள் சம்மேளனத்திற்கான புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும். (203-95)

## மதுபோதையில் வீதிகளில் நடமாடுவோரால் சிரமம்

நல்லூர்,செப்.17

கொழும்புத்துறைப் பகுதியில் மதுபோதையில் வீதியில் சத்தமிட்டபடி நடமாடுபவர்களால் அப்பகுதியில் உள்ள மக்கள் பல்வேறு சிரமங்களுக்குள்ளாவதாக முறைப்பாடு கூறப்படுகிறது.

இப்பகுதியில் உள்ள பலர் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவதாகவும் இரவு வேளைகளில் மதுபோதையில் வீதிகளில் தகாத வார்த்தைகளை உரக்கக் கூறியபடி சிலர் நடமாடுவதாகவும் கசிப்பு விற்பனையும் இப்பகுதியில் இடம்பெறுவதாகவும் மக்கள் முறைப்பாடு செய்கின்றனர். (203-111)

## மலசலகூடம் அமைக்க நிதி ஒதுக்கீடு

சுழிபுரம்,செப்.17

சுழிபுரம், திருவடிநிலை நீத்துவன் கிராமத்திலுள்ள அரசினர் தமிழ்கலவன் பாடசாலை மாணவர் பாவனைக்காக புதிய மலசலகூடம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கல்விப் பகுதி உத்தியோகஸ்தர் மேற்பார்வையில் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. பாடசாலை அதிபர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார். (203-28)

## முதியோர் இல்லத்திற்கு பல்வேறு உதவிகள்

சுழிபுரம்,செப்.17

சிவபூமி இல்லத்தினர் சுழிபுரம் - வழக்கம்பரையில் நடத்திவரும் முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியவர்களுக்கு வேண்டிய உணவுகளை வழங்க் தினமும் பலர் முன்வந்து உதவுகின்றனர்.

பணமாகவும் தேவைக்குரிய பொருள்களாகவும் இல்ல நிர்வாகத்தினிடம் வழங்கி வருகின்றனர்.

இருபதுக்கு மேற்பட்ட முதியவர்கள் இல்லத்தில் தங்கியுள்ளனர். இவர்களில் பலர் வருவாய் குறைந்தவர்களும் உறவினர் உதவி குறைந்தவர்களுமாவர்.

இவர்களுக்கு வேண்டிய தேவைகள் யாவற்றையும் இல்ல நிர்வாகிகள் செய்து வருகின்றனர். (203-28)

### வீடற்றவன் நாவலின்
*கதைச்சுருக்கம் - விளக்கம் - விமர்சனம்*



எல்லாவகை இலக்கியங்களும் படைத்த கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய திருத்திய இரண்டாம் பதிப்பு. இந்த நூலைப்படித்தால் வீடற்றவனில் வரும் எந்த வினாவிற்கும் விடை எழுதலாம்

ரூபா 75.00

(64877)

### யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்
### அவசர கலந்துரையாடல்

எமது சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட அனைத்துப் பாரவூர்திகளின் உரிமையாளர்களையும், சாரதிகளையும், 20.09.2007 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு எமது தெல்லிப்பழை காரியாலயத்துக்கு தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*குறிப்பு:* பாரவூர்தி ஆவணங்களையும் கொண்டுவரவும்.

*215, பழைய பூங்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி/53719) - நிர்வாகம்.

### ஓராண்டு நினைவு

தோற்றம் 03 ★ 01 ★ 1923



மறைவு 30 ★ 08 ★ 2006

**அமரர் சொ.சிவபாக்கியம்**

திதி: ஷஷ்டி

அன்புடன் எமை அரவணைத்து
ஆளாக்கிய அன்னையே!
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள்
போனாலும் மறப்போமா உங்களை...

(64899)

*315, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

### விற்பனைக்கு

2 சிறி தொடரிலக்கமுடைய மைனர் காரும்,
3 சைக்கிள்களும் விற்பனைக்கு உண்டு.
*தொடர்பு - து.நடராஜா,*
*ஐந்து சந்தி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவகுடும்பம், 1977ஆம் ஆண்டு பிறந்த உயரம் 5' 8'',7 இல் செவ்வாய், கிரகபாவம் 32 புனர்பூசம் 4ஆம் பாதம் அரச திணைக்கள எழுதுனருக்கு மணமகள் தேவை.
விளம்பர இல: 3009 மே/பா உதயன். (64893)

### தவறிவிட்டது

நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வநாயகர் சிவசங்கர் என்பவருடைய தே.அ.அட்டை(861374106V) சுழிபுரத்துக்கும் பண்டத்தரிப்புக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பு என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.T.P: 0602213175

### தொழில் வெற்றிடம்

இலத்திரனியல் பொருள்கள் இறக்குமதி செய்து விற்பனை செய்யும் கடைக்கு Accounts & Sales செய்யக்கூடியவர்கள் உடன் தேவை. திறமைக்கேற்ற சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும். கொக்குவிலை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்கள் இருபாலரும் நேரில் வரவும்.

*மேலதிக விவரங்களுக்கு*
Sats - Tech Engineers,
182, K.K.S.Road,Kokuvil.
T.P - 021-222 5908 (64904)


### அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

916 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கன்னி 10 22 40 44

14-09-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 5176378 - 5191538

ஜக்பொட் பரிசு ரூபா. 1,763,100/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 329,973 | 10/- | 3,299,730/- |
| 2 இலக்கங்கள் | 30,345 | 20/- | 606,900/- |
| 1 இல. + லக்கினம் | 30,045 | 30/- | 901,350/- |
| 2 இல. + லக்கினம் | 2,742 | 100/- | 274,200/- |
| 3 இலக்கங்கள் | 813 | 500/- | 406,500/- |
| 3 இல. + லக்கினம் | 76 | 5,000/- | 380,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,763,100/- | 1,763,100/- |
| மொத்தம் | | | 8,031,780/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 394,004 | | 9,055,280/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல.4300483 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 செப்டம்பர் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| இரத்தினபுரி | 5187044-1-02 |
| அனுராதபுரம் | 5187348-7-05 |
| மாத்தளை | 5188497-5-78 |
| மொனராகலை | 5188430-5-68 |
| கொழும்பு | 5190837-5-48 |


## மரண அறிவித்தல்கள்

### *திருமதி கனகசபாபதி சிதம்பரவல்லி*



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசபாபதி சிதம்பரவல்லி நேற்று (16.09.2007) ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏகாம்பரம் தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற கனகசபாபதி (பெரியசெட்டியார்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராமலிங்கம் தம்பதியரின் மருமகளும், தனலட்சுமி, சுந்தரகணேசன், வரகுகணேசன், விஜெயலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயும், சரஸ்வதி, சரவணமுத்து, திலகேஸ்வரி, குககுமாரராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், சாரதாதேவி, சாந்தினிதேவி, சறோஜினிதேவி, சத்தியதேவி, சாந்தினி, சாந்தசிலோசனி, ஸ்ரீரஞ்சன், தயாநந்தன், குமாரதாஸ், காயத்திரி, சுகந்தினி, இராஜகுலசேகரன், கிருஷ்ணலிங்கம், சுபாஜினி, அருளரசி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தனுஷா, நிரேஸ், சுஜாந், கிசாந் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*51/12, செட்டித்தெரு,*
*நல்லூர்.* (64903)

தகவல்:
கு.காயத்திரி *(பேர்த்தி).*

### *துரைராசா விஜயரட்ணம் (பப்பி)*



நல்லூர், இல.36/1, ஆசீர்வாதப்பர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா விஜயரட்ணம் (பப்பி) 11.09.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசா - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும் சாந்தியின் அன்புக் கணவரும் இராஜேஸ்வரி, பவளராணி, கோமதி, சண்முகராசா, குலேந்திரன், லோகநாதன், விஜயராசா, கிருபாகரன், ரஜனி காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்மராசா, தங்கராசா, இராஜேந்திரன், ரோகினி, கிரிஜா, கிரிஜாநிதி, புஸ்பரதி, தனுசியா, கௌரீஸ்வரி, தங்கேஸ்வரன், வனமோகன், ராசன், சீலன், லதா, பரமேஸ்வரி, ஜெகதீஸ்வரன், தமிழ்ச்செல்வி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2007) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*36/1, ஆசீர்வாதப்பர் வீதி,*
*நல்லூர்.* (64905)

தகவல்:
வி.சாந்தி (மனைவி),
து.பரமேஸ்வரி (தாய்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட நேரம் மட்டுமே தொழிலுக்கு அனுமதிக்கப்படுவதால்

# வருமானம் போதாமையால் குடாநாட்டு மீனவர்கள் தொழிலை நிறுத்தும் நிலைக்கு!

யாழ்ப்பாணம்,செப்.17

குடாநாட்டில் குறிப்பிட்ட நேரம் மட்டுமே கடற்றொழில் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளமையால் கடற்றொழிலாளர்கள் வருமானம் போதாது பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதனால் தொழிலை ஒட்டுமொத்தமாக நிறுத்தும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் கூறப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக கடற்றொழிலாளர்கள் பலரிடம் கேட்டபோது:-

இன்று மீன்பிடித்தொழில் ஆபத்து நிறைந்ததொன்றாகிவிட்டது. தொழிலுக்குச் செல்லும் நாங்கள் எமக்கென பாதுகாப்புப் படையினரால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்குச் சற்று சிறிது பிந்தி வந்தாலும் தாக்குதல்களுக்கு ஆளாகிறோம்.

தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது கடலில் இடம்பெறும் தாக்குதல்களுக்கு இலக்காவதுடன் சேதங்களுக்கும் சிலசமயங்களில் உயிரிழப்புக்கும் உட்படவேண்டியுள்ளது.

நிவாரண உதவிகளுமின்றி நாமும் எமது குடும்பங்களும் பலத்த கஷ்டங்களை எதிர்கொண்டு வருகிறோம்.

குறிக்கப்பட்ட நேரம்வரை தொழிலில் ஈடுபட்டாலும் போதியளவு மீன்கள் கிடைப்பதில்லை. வெறுங்கையுடனேயே திரும்பி வரும் நிலைமையும் அடிக்கடி ஏற்படுகிறது.

தொழில் சாதனங்கள் யானை விலை, குதிரை விலை என்று உயர்ந்துள்ளது. எரிபொருள் விலை குறித்துச் சொல்லத் தேவையில்லை.

ஆபத்துக்களின் மத்தியில் வாழ்வதை விட பட்டினியால் சாவது பரவாயில்லை என்ற விரக்தி நிலையே மனதில் அடிக்கடி உண்டாகிறது.

எமது நிலைமைகள் குறித்து ஒரு நல்ல தீர்வு தேவை. அதற்காக சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான குழுவுக்கும் ஏனைய பொது நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் எமது நிலைப்பாட்டை எடுத்துச் சொல்லவுள்ளோம்.

அதன் பின்னராவது எமது வாழ்வுக்கு ஒரு புதிய திருப்பம் ஏற்படாதபட்சத்தில் முற்றுமுழுதான தொழில் நிறுத்தத்தை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்படலாம் - என்று தெரிவித்தனர். (203-111)

## குடிதண்ணீர் இன்றி தீவக மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம்,செப்.17

தீவகப் பிரதேச மக்களுக்கு குழாய் மூலம் வழங்கப்பட்டு வரும் குடிதண்ணீர் போதாமையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வரட்சியான காலங்களில் இப்பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர் குழாய் மூலம் விநியோகம் செய்யப்படுவது வழமை.

இவ்வாறு வழங்கப்படும் குடிதண்ணீர் அப்பகுதி மக்களுக்குப் போதாது உள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - குழாய் மூலம் வழங்கப்படும் குடிதண்ணீர் சுத்தமானதா என உரியவர்கள் உறுதிப்படுத்தவேண்டும் எனவும் மக்கள் கேட்டுள்ளனர். (203)

## தென்மராட்சியில் நெற்செய்கை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.17

தென்மராட்சிப் பகுதியில் காலபோக நெற்செய்கையை விவசாயிகள் ஆர்வத்துடன் ஆரம்பித்துள்ளனர். நெற்செய்கை வயல்களை பண்படுத்தும் முயற்சியில் தற்போது ஈடுபட்டுவருகின்றனர்.

கடந்த வருடம் மிதிவெடி அபாயம் குறித்து அறிவுறுத்தப்பட்ட இடங்களில் வெடிகள் அப்புறப்படுத்தப்பட்டதால் அந்தப் பகுதிகளிலும் விவசாய நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை - சில விவசாய நிலப்பகுதிகளில் கட்டக்காலி மாடுகள் மற்றும் பன்றிகளின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. (202-131)

## சுன்னாகத்தில் கசிப்பு விற்பனை செய்த பெண்ணுக்கு 40ஆயிரம் ரூபா அபராதம்

வலி.வடக்கு,செப்.17

கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் 40ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது. அபராதம் கட்டத் தவறும் பட்சத்தில் 9 மாத கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சுன்னாகம் கிழக்கு, பூதராயர் கோயிலடியைச் சேர்ந்த சந்திரசேகரம் கமலவேணி என்பவருக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக அதிக எண்ணிக்கையில் கசிப்பு உற்பத்தி, விற்பனையாளர்கள் சுன்னாகம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (203-86)

## சண்டிலிப்பாய் பிரதேச முதியோருக்கு அன்பளிப்பு

வலி.தென்மேற்கு,செப்.17

சாந்தியகம் நிறுவனத்தினால் வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சில்லாலை, சாந்தை முதியோர் சங்க உறுப்பினர்களுக்கு அவர்களின் பயன்பாட்டுக்கு தேவைப்படும் பொருள்கள் கடந்த வாரம் வழங்கப்பட்டுள்ளன.

வெந்நீர் போத்தல், சிறிய ரக வானொலிப்பெட்டி, பாய், பெற் சீற் ஆகிய பல்வேறு பொருள்கள் அன்பளிப்பு செய்யப்பட்டிருப்பதாக வலி.தென்மேற்கு பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (203-135)

## தென்மராட்சியில் விறகு கடத்தியவர் பொலிஸில் சிக்கினார்

யாழ்ப்பாணம்,செப்.17

தென்மராட்சிப் பிரதேசத்தில் விறகு கடத்தலில் ஈடுபட்ட நபர் பொலிஸாரிடம் சிக்கினார்.

விறகு கடத்தலில் ஈடுபட்டு வந்த மட்டுவில் முசுறியைச் சேர்ந்த ஆசைப்பிள்ளை ரவீந்திரன் என்பவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் தகவல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இதனை விசாரித்த நீதிவான் சந்தேக நபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (202-207)



சிறுவர் பாதுகாப்பு நிதியம் மட்டுவில் கிழக்கு ஜே/314 சிறுவர் பாதுகாப்புக் குழுவிற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்கள் பத்து பேருக்கு இலவசமாக சைக்கிள் களை வழங்கியுள்ளது.

இவற்றை வழங்கும் நிகழ்வு அண்மையில் மட்டுவில் கிழக்கிலுள்ள சிறுவர் பாதுகாப்புக் குழுவின் அலுவலகத்தில் குழுவின் தலைவர் செ.ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு நிதிய இணைப்பாளர் எஸ்.மகேந்திரன் உரையாற்றுவதையும் மாணவி ஒருவருக்கு சிறுவர் குழுவின் அங்கத்தவர் த.அஜீவன் சைக்கிள் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் இவை வழங்கப்பட்டு வருகின்றன. எனவே மாணவர்கள் கல்வியை மிகவும் ஆர்வத்துடன் கற்கவேண்டும் எனவும் இவ்வாறு வழங்கப்படும் சைக்கிள்களை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதை தவிர்க்கவேண்டுமெனவும் சிறுவர் பாதுகாப்பு நிதிய இணைப்பாளர் உரையாற்றும்போது தெரிவித்தார்.

## பெரும்போக விதை நெல் விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.17

உடுவில் - சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கமநலகேந்திர நிலையங்களுக்கான விதை நெல் கிடைக்கப் பெற்றுள்ளது.

பெரும்போக விதைநெல் தேவைப்படுவோர் விவசாய சம்மேளனங்கள் ஊடாக பெரும்பாக அதிகாரிகளிடம் பெற்றுக்கொள்ளமுடியும்.

2007ஆம் ஆண்டின் பெரும்போக தேவைக்கு தென்பகுதியில் இருந்து சிறிய ரக பி.டயிள்யூ, ஏ.ரி இனங்களே தருவிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே விதைநெல் தேவை என விண்ணப்பித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு நெல் விநியோகம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உரிய விதைப்பு காலத்தில் வி - 1 பசளைகளும் வழங்கப்படவுள்ளன என்று கூறப்பட்டுள்ளது. (203-95)

## பால் சேகரிப்பு நிலையம் மீசாலையில் திறப்பு

யாழ்ப்பாணம்,செப்.17

யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினர் மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக பால் சேகரிப்பு நிலையத்தினை ஆரம்பித்துள்ளனர்.

தென்மராட்சி பிரதேச கால்நடைப் பண்ணையாளர்களிடமிருந்து தினமும் காலை 6.00 மணி தொடக்கம் 7.30 மணிவரை பால் கொள்வனவு செய்யப்படுமெனவும் நுகர்வோரும் காலை 6.00 மணி தொடக்கம் பால் பெற்றுக்கொள்ளலாமென சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அறிவித்துள்ளார்.

பால் உற்பத்தியாளர்கள் சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் தொடர்புகொண்டு விவரங்களைப் பெற்றுக்கொள்ளாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (1-207)

## உள்ளூராட்சிச் சபைகள் தரமுயர்த்தப்படவுள்ளன

யாழ்ப்பாணம்,செப்.17

பின்தங்கிய உள்ளூராட்சி சபைகள் தரமுயர்த்தப்படவுள்ளன.

நாடளாவிய ரீதியில் இத்திட்டங்களை நடைமுறைப்படுத்த 25மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் இவ்வாறு அறிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக இத்திட்டம் ஆராயப்படவுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களில் புதிதாக நியமனம் பெற்ற அபிவிருத்தி அலுவலர்கள் ஊடாக இத்திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது. (203-95)



வடமராட்சி பரமானந்த ஆச்சிரமத்தில் மருத்துவத்துறையினரும் லயன்ஸ் கழகமும் இணைந்து அண்மையில் சிரமதானம் மற்றும் மருத்துவமுகாம் ஆகியவற்றை நடத்திய போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: சுந்தர்)

## வலி.கிழக்கில் 26 வேலைத்திட்டங்களுக்கு 28லட்சத்து 50ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு

அச்சுவேலி,செப்.17

வலி.கிழக்குப் பிரதேச சபைப் பகுதியில் உள்ள 26 வேலைத் திட்டங்களுக்கு 28லட்சத்து 50ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியிலிருந்து 23 லட்சத்து 50ஆயிரம் ரூபாவும் மாகாணசபை நிதியில் இருந்து 5 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மாவை சேனாதிராசா, பிரேமச்சந்திரன், பத்மினி சிதம்பரநாதன், டக்ளஸ் தேவானந்தா, சிவநேசன், ஸ்ரீகாந்தா ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர்.

வேலைத்திட்டங்களும் அவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டு விவரமும் வருமாறு:-

அச்சுவேலி இந்திரகாந்தி சனசமூக நிலையத்துக்கு 50ஆயிரம் ரூபா, ஆவரங்கால் கவுடுது மயான திருத்தம் ஒரு லட்சம் ரூபா, செல்வாபுரம் உதயசூரியன் சனசமூக நிலையம் 50ஆயிரம் ரூபா, வலி.கிழக்கு முன்பள்ளிக்கு தளபாடம் கொள்வனவு ஒரு லட்சம் ரூபா, ஆவரங்கால் சர்வோதய சன சமூக நிலையத்துக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

சென்.மைக்கல் சனசமூக நிலையத்துக்கு 40 ஆயிரம் ரூபா, உரும்பிராய் காந்தி மதி சனசமூக நிலையத்துக்கு 40ஆயிரம் ரூபா, அச்செழு மலர்மதி சனசமூக நிலையத்துக்கு 50ஆயிரம் ரூபா, அச்சுவேலி கஜமுகன் பாலர் பாடசாலைக்கு ஒரு லட்சம் ரூபா, அச்சுவேலி விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்துக்கு 5 லட்சம் ரூபா, ஆவரங்கால் கிழக்குமயானத்துக்கு ஒரு லட்சம் ரூபா,

ஆவரங்கால் பிரகாசம் பாலர் பாடசாலைக்கு 75 ஆயிரம் ரூபா, கல்வியங்காடு ஞானபாஸ்கரேதயாவுக்கு 5 லட்சம் ரூபா, ஆவரங்கால் லிங்கன் சனசமூக நிலையத்துக்கு 75 ஆயிரம் ரூபா,

நீர்வேலி காமாட்சி அம்பாள் சனசமூக நிலையத்துக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா, நீர்வேலி சீயாக்காடு மயானத்துக்கு ஒரு லட்சம் ரூபா,

ஊரெழு சரஸ்வதி சனசமூக நிலையத்துக்கு 50ஆயிரம் ரூபா, வலி.கிழக்கு பிரதேச சபைக்கு கணனிக் கொள்வனவு ஒரு லட்சம் ரூபா, கோப்பாய் சன சமூக நிலையத்துக்கு 75ஆயிரம் ரூபா, கோப்பாய் வெள்ளெருக்கம் பிள்ளையார் ஆலயத்துக்கு 75ஆயிரம் ரூபா,

நீர்வேலி காமாட்சி அம்மன் ஆலயத் தளபாடத்துக்கு 50 ஆயிரம் ரூபா, புத்தூர் அறிவொளி சனசமூக நிலையத்துக்கு 50ஆயிரம் ரூபா, வலி.கிழக்கு பிரதேச சபை கணனி உபகரணம் ஒரு லட்சம், கிராம சன சமூக நிலைத்துக்கு 50ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாகாண சபை மூலம் 5 லட்சம் ரூபா உரும்பிராய் பொதுச்சந்தை திருத்தவேலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (203-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசீகர தோற்றத்திற்கு

# சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)




[illegible]

பூரணமாகக் குணப்படுத்தும்.

[illegible]

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்

**'சிவா நறுமணப் பூங்கா'**

288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250


*பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் (வ.து)*

## பதவி வெற்றிடம்

கீழ்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01.பதவி :- சாரதி வெற்றிடம் - 01
பதவி குறி.இல:- 312/13
சம்பளத் திட்டம்:- 9950 -11700
85x10 - 90x10

**கல்வித்தகைமைகள்**:- 05 ஆம் வகுப்பு கல்வி தராதரப் பத்திரத்துடன் பஸ்/ லொறி/ டிராக்டர் அத்துடன் ட்றெயிலர் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

02.பதவி:- அலுவலக உதவியாளர் வெற்றிடம் - 01
பதவி குறி.இல :- 317/16
சம்பளத் திட்டம் :- 9200 - 10650
70x10 - 75x10

**கல்வித் தகைமைகள் :-**

அ) கூட்டுறவுப் பணியாளரின் 17ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் 01 வருடத்திற்குக் குறையாத அனுபவமும், 5ஆம் வகுப்பு கல்வித்தராதரப் பத்திரமும்

அல்லது

ஆ) 8 ஆம் வகுப்பு கல்வித்தராதரப் பத்திரம்

*வயதெல்லை :-* **18-45வரை**

*விண்ணப்ப முடிவு திகதி :-* *29-09-2007*

*குறிப்பு:-* வயதெல்லையில் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச்சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்களது சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**அனுப்ப வேண்டிய முகவரி** :- *தலைவர்,*
*பண்டத்தரிப்பு பரிஷ்- ப.நோ.கூ.சங்கம்,*
*பண்டத்தரிப்பு.*

(சி.53716)

## கண்ணீர் அஞ்சலி



*கோண்டாவில் சித்திவைரவர் அம்பாள் ஆலய தலைவர்* **சண்முகராசா** *அவர்களின் அன்புத் துணைவி*

### திருமதி இரத்தினேஸ்வரி

*அவர்கள் 13.09.2007 வியாழக்கிழமை அகால மரணமான செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.*

*ஆலய நிர்வாகமும், இளைஞர்களும்,*
*சித்திவைரவர் அம்பாள் ஆலயம் கோண்டாவில்.*

(64886)

## ஆறுமா ஆறாண்டில்...!

இகவாழ்வு
06 ★ 08 ★ 1967



பரவாழ்வு
24 ★ 08 ★ 2001

### திருமதி தர்மகுலசிங்கம் விமலலோஜினி

*(B.A.(Hons), Dip.in Edu. (Merit) ஆசிரியர், மானி.மகளிர் கல்லூரி)*

*திதி: 17.09.2007*

ஓடி மறைந்த ஒளி தேடியும் தெரியவில்லை..!
தேசம் விடிய தேடிய செல்வம் ... நீ
பாச மகன் விமலன் வாடி வதங்கி... அம்மா?
என அழைக்கும் மழலை மொழி
உன் செவியில் கேட்கிறதா... விமலா!!
நீ அணைந்த நாளுடன் நேசமகன் அம்மா...
அம்மா... என தேடுகிறான்... இந்நாளில்...!!!
வாடிய இரு பயிரும் அழுகுரலில்
தேவலோகம் வர ஒலிக்கின்றோம்...என
ஆறாத ஆறாண்டில் துயருற்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
**இ.தர்மலிங்கம்** (கணவர்),
**விமலலோஜன்** (மகன்),
மாமா, மாமி, மச்சான்மார், மச்சாள்மார்.

விமலமாளிகை,
உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

(சி-53534)

## புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் கோழிகள் சுத்தம் செய்து தேவையான அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விலைக்கழிவு உண்டு.

*குமரன் பாம், 227, பிறவுன் வீதி*
*(நரிக்குண்டு அருகில்), யாழ்ப்பாணம்.*

## உடன் விற்பனைக்கு

* L.G. குளிர்சாதனப் பெட்டி
* SONY WEGA 21'' வர்ண தொலைக்காட்சி பெட்டி

என்பன உடன் விற்பனைக்குண்டு.

*தொடர்பு:-* **செ.நவரத்தினம்**
*நந்தாவில் லேன், கொக்குவில்கிழக்கு,*
*கொக்குவில்.*
T.P.: 0776144755 (64890)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி சந்தை, பல்கலைக்கழகம் அமைந்த சுற்றாடலில் பரப்பு மூன்று 16.90 குளி காணி விற்பனைக்குண்டு. பி.பகல் 5மணியின் பின்னர் தொடர்பு கொள்ளவும். தரகர் தேவையில்லை.

S. **இராமசாமி**
*மரஅரிவு ஆலை, 3ஆம் கட்டை, கட்டப்பிராய்,*
*கல்வியங்காடு.* (64901)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

சொந்தப் பண்ணைக்கென வளர்க்கப்பட்ட பிறீமா முட்டையிடும் இன கோழிக்குஞ்சுகள் (சகல தடை மருந்துகளும் கொடுக்கப்பட்டது), 2மாத வளர்ச்சி கொண்டது விற்பனைக்குண்டு.

தொடர்பு:- **ஞான செந்தூரன், அபிராமி மஹால், அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.**
T.P.: 021 226 3403
(சி.53717)

### சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## வெதுப்பக போறணை வாஸ் தேவை

எமது சங்கத்தால் நடத்தப்படும் வெதுப் பகத்துக்கு போறணை வாஸ் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

தகுதியானோர் காரியாலய நேரத்தில் நேரடியாக எம்மிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

விண்ணப்ப முடிவு திகதி:
**22.09.2007 சனிக்கிழமை**

**பொதுமுகாமையாளர்.**

(சி.53715)

## கண்ணீர் அஞ்சலி

வலி. கிழக்குப் பிரதேச சபையில் கடமையாற்றும்
**வி.பி செல்வநாதன்**
(முகாமைத்துவ உதவியாளர்)
அவர்களின் மாமன்

### செல்லர் இராசா

அவர்கள் 14,08.2007 அன்று இறைபதம் அடைந்தார். அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

*தலைமைக் காரியாலயம்,*
*வலி. கிழக்குப் பிரதேச சபை,*
*புத்தூர்.*

(64902)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சுதந்தரராஜன்



மயிலணி வடக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சுதந்தரராஜன் (பொறியியலாளர்) 15.09.2007 சனிக்கிழமை கனடாவில் காலமாகி விட்டார்.

அ[illegible]ணார் ஆறுமுகம்- பரம்சோதி தம்பதியரின் இளையமகனும் மட்டுவில் திரு. திருமதி சின்னத்துரை மாஸ்ரர் தம்பதியரின் மருமகனும் நிர்மலாவின் அன்புக் கணவரும் மதுஷன், பிருத்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும் சொர்ணலிங்கம் (திட்டப்பணிப்பாளர், மட்டக்களப்பு), பரமேஸ்வரன் (பொறியியலாளர், கொழும்பு), புவனராணி, ஜோதிராணி, காலஞ்சென்ற தேவராணி, ஜீவராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிறீதரன் (கட்டட ஒப்பந்தக்காரர், மல்லாகம்), காலஞ்சென்ற தர்மலிங்கம், செல்வராசா ஆகியோரின் பாசமிகு மச்சானும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் ரொறன்டோ கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*சிறீதரன்*
*(கட்டட ஒப்பந்தக்காரர்).*

*மல்லாகம்.*

(சி.53718)


WESTERN UNION

வெளிநாட்டு உறவினர்கள்

WESTERN UNION மூலம் பணம் அனுப்பி பணப்பரிமாற்றம் இலக்கம் (MTCN IO இலக்கங்கள்) கிடைத்து விட்டதா? ஒரு சில நிமிடங்களில் உங்கள் கைகளில் பணத்துடன் பரிசில்களையும் பெற்றுக் கொள்ள

**SRI MURUGAN**
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

303, K.K.S.ROAD,
JAFFNA.

T.P.: 021- 222 2670, 5392
Fax: 021- 2223214
e.Mail: srimurugan @ eureka.lk

(C/53261)


## நன்றி நவிலல்



திருமதி

### மங்களகௌரி புவனேஸ்வரன்

(ஆசிரியை - மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்)

எமது குடும்பத்தின் ஒளி விளக்காகவும், வழிகாட்டியாகவும் வாழ்ந்த தூண்டாமணி விளக்கு திடீரென அணைந்து எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி இறைவனடி சேர்ந்த எமது தெய்வம் திருமதி மங்களகௌரி புவனேஸ்வரன் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, எமக்கு உரிய நேரத்தில் உதவி புரிந்த SLRC அம்புலன்ஸ், வைத்தியசாலைச் சமூகம் மற்றும் அவர் மறைந்த செய்தி அறிந்தவுடன் ஓடோடி வந்து ஆறுதல் கூறிய அயலவர்கள், நேரடியாகவும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து தொலைபேசி மூலமாகவும், தந்தி மூலமாகவும் எமது துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் ஆறுதல் கூறியவர்களுக்கும், இரங்கலுரை ஆற்றி கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வழங்கிய மத்திய கல்லூரிச் சமூகத்திற்கும், பூமாலை, மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், பத்திரிகை வாயிலாக கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், பல்கலைக்கழக மாணவ நண்பர்களுக்கும் மற்றும் எமது ஆறாத் துயரில் பங்கு கொண்டு அனைத்து வழிகளிலும் ஒத்தாசை நல்கிய நல்ல உள்ளங்கள் அனைத்திற்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

32,(New No 70), Chapel Street,
Jaffna.
T.Phone 222 9327

**குடும்பத்தினர்.**

(சி.53714)

## மரண அறிவித்தல்கள்

### நாகநாதி தவவினாயகன்



புங்குடுதீவு, 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், அரசடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதி தவவினாயகன் 14.09.2007 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதி- இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் பொன்னம்பலம்- மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் தமயந்தியின் அன்புக் கணவரும் டிலாகர், டிலக்ஷனா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாக்கியம், மங்கையர்க்கரசி, விஜயலட்சுமி, மங்கையற்செல்வி, சாரதாம்பிகை, திருநாவுக்கரசு, விமலா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரன், வத்சலாதேவி, உமைபாலன், சிவபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் குணரத்தினத்தின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 73/2, கொட்டேனா, கொழும்பில் இன்று (17.09.2007) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பொறளை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
பொ.உமைபாலன்
*(மைத்துனர்).*

*70/11, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(64895)

திருமதி

### சண்முகராசா இரத்தினேஸ்வரி

கோண்டாவில் குமரகோட்டத்தைச் சேர்ந்த சண்முகராசா இரத்தினேஸ்வரி 13.09.2007 வியாழக்கிழமை அகாலமரணமடைந்து விட்டார்.

அன்னார் சண்முகராசாவின்(இளைப்பாறிய மாவட்ட தபால் தந்தி பரிசோதகர்) அன்பு மனைவியும் இராசையா- இராசம்மாவின் தம்பதியரின் அன்பு மகளும் அமரர் தம்பிமுத்து, சந்திரசேகரம், நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகாலட்சுமி (கனடா), தில்லை நடராஜா(இளைப்பாறிய மாவட்டத் தபால் தந்திப் பரிசோதகர்), தருமராஜா (கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும் சாயிக்குமார் (கனடா), Dr.கோமதி (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம்), கௌரி ஆகியோரின் தாயும், யசோதா (கனடா), சிவகுமார் (விரிவுரையாளர், தெழில்நுட்பக் கல்லூரி, மட்டக்குளி), பிரணவச் செல்வன்(எவரெடி எனஜைசர் லங்கா லிமிட்டெட், கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமியும் வல்லிபுரம் (நியாப்), கனகரத்தினம் (சுகாதாரப் பரிசோதகர்) , துரை (வர்த்தகர்) ஆகியோரின் சம்பந்தியும் நிசாயீசன், சபரீசன், நிசாயினி, விதுசாயினி, கபினயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2007) திங்கட்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

*குமரகோட்டம்,*
*கோண்டாவில்.*

(64885)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்வுகள்...நிகழ்வுகள்...



புலோலி புற்றளை மகா வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்திராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டப் பிரதிப் பணிப்பாளர் வீ.வீரபத்திரப்பிள்ளை உரையாற்றுவதையும் அதிபர் எம்.அனந்தீஸ்வரன் உட்படப் பலர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (160)



மக்கள் வங்கியின் 'சிசு உதான' சாதனையாளர் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை மக்கள் வங்கியில் நடைபெற்ற சாதனையாளர் கௌரவிப்பு விழாவில் பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.சிவனேசன் தலைமை உரையாற்றுவதையும் மக்கள் வங்கி உதவிப் பிராந்திய முகாமையாளர் திருமதி சிவனருள்சுந்தரம், மக்கள் வங்கி வட வலய உதவிப் பொதுமுகாமையாளர் வி.கே.ஆனந்தராஜா, வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வி.செல்வராசா, பருத்தித்துறை மேலதிக மாவட்டப் பதிவாளர் திருமதி எஸ்.தியாகராசா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (78)




அகில இலங்கைத் திருமுறை மன்றம் அண்மையில் நல்லூர் சிவன் ஆலயத்தில் நடத்திய திருமுறைப் பெருவிழாவில் மன்ற தேவாரப் பண்ணிசை ஆசிரியர், நுண்கலைமாணி, பண்ணிசைச் செல்வி, கலாவித்தகர் செல்வி ஜனனி நல்லைநாதனை மன்ற சார்பில் யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை தலைவர் செல்வி பாக்கியலெட்சுமி நடராசா பொன்னாடை போர்த்துக் கௌரவித்தபோது எடுக்கப்பட்ட படம். அருகில் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகமும் காணப்படுகின்றார்.




ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகத்தில் அண்மையில் பாடசாலை ஆதார முகாமைத்துவ செயலமர்வு இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை உரையாற்றுவதையும் நிறுவன உதவிப்பணிப்பாளர் த.சிவகுமார், பணிப்பாளர் பா.தனபாலன், கல்வியியலாளர்கள் திருமதி ஞா.கணேசநாதன், திருமதி வி.நரேந்திரா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



மானிப்பாய் மகளிர் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்ற வருடாந்த ஒன்றுகூடலும் மதியபோசன விருந்தும் அண்மையில் நடைபெற்றது. அவ்வைபவத்தின்போது சிறப்பு விருந்தினர் வைத்திய கலாநிதி றோ.மகேஸ்வரன் மங்கள விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.யோகநாதன், அதிபர், சிரேஸ்ட ஆசிரியர் ஆகியோர் நிற்பதையும் காணலாம்.

## மின்சாரத் தடையின்போது வேலணைப் பகுதியில் திருட்டுக்கள்

யாழ்ப்பாணம், செப்.17

வேலணைப் பகுதியில் மூன்று இடங்களில் நேற்று முன்தினம் இரவு திருட்டுகள் இடம்பெற்றுள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் இத்திருட்டுக்கள் இடம் பெற்றுள்ளன.

வேலணை சாட்டிவீதியில் இரண்டு இடங்களிலும் வங்களாவடிச் சந்தியில் வெதுப்பகம் ஒன்றிலும் திருட்டு இடம்பெற்றுள்ளது.

சாட்டி வீதியில் உள்ள வர்த்தக நிலை யம் ஒன்றின் கதவுகளை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அரிசி மூடைகள் உட்பட பெருமளவான பொருள்களைத் திருடியுள்ளனர்.

அதற்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் இருந்து கதவுகள், தையல் இயந்திரங்கள் உட்பட பல பொருள்கள் திருடப்பட்டுள்ளதுடன் வங்களாவடிச் சந்தியில் உள்ள வெதுப்பகம் ஒன்றில் கைத் தொலைபேசியும் திருடப்பட்டுள்ளது. மின்சாரம் இல்லாத வேளைகளிலேயே திருட்டுகள் இடம்பெற்றுள்ளன.

இது தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டது. (203)

## வளங்கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு நூல் வெளியிடப்பட்டது

யாழ்பாணம், செப்.17

'வளம்கொழிக்க உளம் செழிக்கும் உசன்' வரலாற்று நூல் வெளியீட்டு விழா கடந்த 2ஆம் திகதி கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இவ்விழாவுக்கு முன்னாள் சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி இராஜநாயகம் தலைமை தாங்கினார். வரலாற்றுச் சிறப்புமிக்க உசன் கிராமத்தின் வரலாறுகள், எதிர்காலச் சமூகம் அறிவதற்கும், கால வெள்ளத்தால் அழியாமல் இருப்பதற்கும் நூலாசிரியரான ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் க.பேரம்பலம் நூல் வடிவில் ஆவணப்படுத்தியுள்ளது மிகமிகப் பாராட்டுதற்குரியது என்று அவர் தெரிவித்தார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சிப் பிரதேச செயலாளர் செ.ஸ்ரீநிவாசன், தென்மராட்சிப் பிரதேச வலயக் கல்விப்பணிப்பாளர் அ.வேதநாயகம், பிரதம விருந்தினர் வைத்திய கலாநிதி க.மாணிக்கம், பண்டிதர் அ.பஞ்சாட்சரம், பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், சாவகச்சேரி பிரதேச செயலாளர் ந.பாலச்சந்திரன், சாவகச்சேரிக் கோட்டக்கல்வி அதிகாரி என்.சத்தியநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இவ்விழாவில் உசன் இராமநாதன் மகாவித்தியாலய மூத்த ஆசிரியர் பண்டிதர் எஸ்.கே.தம்பு அவர்களுக்கு பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டது. இவரின் சேவை நயப்புரையை தபால் அதிபர் க.சிவானந்தம் ஆற்றினார். (203)

## கிராமங்களின் அபிவிருத்திக்கு உரிய அமைப்புகள் உதவவேண்டும்

### யாழ்.செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் கருத்து

யாழ்ப்பாணம், செப்.17

பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்தியில் அக்கிராமங்களில் இயங்கும் கிராமிய மட்ட அமைப்புக்களுக்கும் அதிக பங்குண்டு. இதன் ஊடாக கிராமங்களை முன்னேற்றுவது மட்டுமல்லாமல் கிராமிய பொருளாதாரத்தையும் வலுப்படுத்த முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்டச் செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.தியாகமூர்த்தி.

கடந்த மாதம் 'சொண்ட்' அரச சார்பற்ற நிறுவனத்தில் நடைபெற்ற வறிய மக்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் பாலசுப்பிரமணியம் கலந்துகொண்டு தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான உதவித்தொகைகளை வழங்கினார்.

இந்த உதவித் திட்டங்கள் அனைத்தும் சுயதொழில்களை மேம்படுத்துவதற்காக வழங்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய யாழ்.மாவட்டச் செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் எமது மாவட்டத்தின் பொருளாதார அபிவிருத்தியானது கிராம மட்டங்களிலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும். உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க வேண்டும். இதனால் எமது மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சியில் நாமும் பங்காளியாவது மட்டுமல்லாமல் ஏழை மக்களின் பசியைப் போக்குவதற்கும் நாம் பங்களிப்புச் செய்ய முன்வரவேண்டும் - என்றார். (203)

## வலி.தென்மேற்கில் பெரியளவில் மரம் நடுகைத் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.17

வலி.தென்மேற்கு பகுதியில் உள்ள பயன்தரு மரங்களில் பெரும்பாலானவை அழிவடைந்துள்ளன.

இதனால் முதற்கட்டமாக மூவாயிரம் பயன்தரு மரங்கள் நடுவதற்கு தீர்மானித்துள்ளேன். இவ்வாறு நவாலி புதிய கமநலசேவை நிலையத்தின் (சண்டிலிப்பாய்) பெரும்பாக அதிகாரி வை.பாலகிருஸ்ணன் தெரிவித்தார். மேற்படி விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

பிரதேச அபிவிருத்திக்கான மரங்களின் எண்ணிக்கை போதுமானதாகவில்லை. இதனால் விரைவில் மழைவீழ்ச்சி குன்றும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இம்மரம் நடுகை முதற்கட்டமாக பாடசாலைகள், ஆலயங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், விவசாயிகள் சம்மேளனங்கள், பொதுமயானங்கள் [illegible] மேற்கொள்ளப்படவுள்ளது.

[illegible] வழங்கி உதவுமாறு பெரும்பாக அதிகாரி வை.பாலகிருஸ்ணன் மேலும் கேட்டுள்ளார். (203-95)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,செப்.17

சாவகச்சேரி செருக்கல்பதி பிள்ளையார் கோயில் பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 26ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (203-207)

* * *

உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடை பெறவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் பிற்பகல் ஒரு மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

## சாவகச்சேரி நீதிமன்றில் பிணைப்பணம் மீளளிப்பு

யாழ்ப்பாணம்,செப்.17

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் பிணைப்பணம் மீளளிப்புக்கு விண்ணப்பித்தவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பிணைப்பணம் மீளளிப்புக்கு விண்ணப்பித்தவர்கள் அலுவலக நாள்களில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (203-207)

## வல்லிபுர ஆழ்வார் ஆலய வீதியில் மக்கள் வங்கியின் கருமபீடம்

யாழ்ப்பாணம்,செப்.17

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளையினர் ஆலய மேற்கு வீதியில் கருமபீடம் ஒன்றை அமைக்கவுள்ளதாக வங்கியின் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இக்கருமபீடத்தில் புதிய கணக்கு ஆரம்பித்தல், குழுந்தைகளுக்கான கணக்கு ஆரம்பித்தல் போன்ற அனைத்துச் செயற்பாடுகளையும் மேற்கொள்ளமுடியும். (203)

## நோயாளர்களுக்கு உணவு அல்லாத பொருள்கள்

வலி.தென்மேற்கு,செப்.17

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் நோயாளர்களுக்கான மாதாந்த பொதுசன உதவிப் பணக்கொடுப்பனவை பெற்று வரும் நோயாளர் குடும்பங்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் உணவு அல்லாத பொருள்கள் அடுத்த வாரம் வழங்கப்படவுள்ளன.

(203-135)

## தென்மராட்சியில் மத்தியஸ்தர் சபை

யாழ்ப்பாணம்,செப்.17

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் மத்தியஸ்தர் சபை அமைக்கப்படவுள்ளது.

மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை கடந்த புதன்கிழமை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்தும் 109 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கை மத்தியஸ்தர் சபை, தென்மராட்சி பிரதேச செயலகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளால் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டது. (203-207)

## காலங்கடந்த பதிவுகளுக்கு உடுவிலில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,செப்.17

யாழ்.மாவட்ட பதிவாளர் அலுவலகமும் உடுவில் பிரதேச செயலகமும் இணைந்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனுசரணையுடன் உடுவில் பிரதேச செயலகத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு காலங்கடந்த பிறப்பு, இறப்பு, விவாகம் தொடர்பான பதிவுகளை மேற்கொள்வதற்கென நடமாடும் சேவையை நடத்தவுள்ளன.

காலங்கடந்த பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகளை மேற்கொள்ள விரும்புவோர் கிராமசேவையாளரிடம் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்தி தேவையான ஆவணங்களுடன் வருகைதருமாறு உடுவில் பிரதேச செயலர் ரி.மஞ்சுளாதேவி தெரிவித்துள்ளார். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## பேராசிரியர் அம்பலவாணர்

எங்கள் பேரன்பின் பிறப்பிடமாய்
அறியாமை இருள் அகற்றும்
உதய சூரியனாய், அறிவுக்
கண்திறந்த நல்லாசிரியனாய்
தொண்டனாய் தோழனாய்த்
திகழ்ந்து எம்மையெல்லாம் மாளாத்
துயரில் ஆழ்த்தி - மீளாத் துயில் கொண்டீரே!

உங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு, உங்களின் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பால் வாடும் உங்கள்குடும்பத்தினருக்கும் ஏனையோருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நீங்கா நினைவுடன்:
நாவற்குழி
கனகரத்தினம் தவநாதன்
குடும்பத்தினர்.

நியூ கருணாநிதி ஸ்ரோர்ஸ்,
124, கொழும்பு வீதி,
கண்டி.
தொ.பே: 081 2225647

(64871)

## எழுத்தறிவூட்டல் தினம்


சர்வதேச எழுத்தறிவூட்டல் தினம் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் கடந்த 3 ஆம் திகதி இடம் பெற்றது.

இதனையொட்டி வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த 8 பாடசாலைகளுக்கிடையே கவிதை, கட்டுரை, பார்த்தெழுதல், சித்திரம் வரைதல் போன்ற போட்டிகள் இப் பாடசாலைகளில் இடம்பெற்றன.

இதில் வெற்றி பெற்ற பாடசாலைகளுக்கு வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார்.

(1-100)

# கண்ணீர் அஞ்சலி



கடந்த 10.09.2007 அன்று கனடாவில் சிவபதமடைந்த எனது மைத்துனரும் பெரு மதிப்பிற்குரியவருமான

## அப்பையா மகாலிங்கம்

(பிரபல வர்த்தகர், கந்தையா கடை, விநாயகர் ஸ்ரோர்ஸ், புத்தளம்)

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற நல்லூர் முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

சோ.குணபாலசிங்கம்
(சின்ராசு- மைத்துனர்).

கேணியடி, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(64872)


## HND New Batch Starts on 23/09/2007 at 10.00 a.m



BTEC HND உங்களுக்கு ஓர் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கி தருகிறது.

இதனை IIS CITY CAMPUS இல் மட்டுமே சாத்தியப்படுத்திக்கொள்ளமுடியும்



கே. துவாரகேதன்
மீசாலை

IIS City Campus இல் HND கற்கைநெறியை பூர்த்திசெய்த மாணவனின் உள்ளத்திலிருந்து

க.பொ.தஉயர்தரப் பரீட்சை 2002 எனக்கு ஏமாற்றத்தை அளித்தது. பல்கலைக்கழக அனுமதியை தவறவிட்டேன். எனது எதிர்காலம் கேள்விக் குறியாகி என் கண்முன் நின்றது. மனமுடைந்திருந்த இவ்வேளையில் IIS City Campus இன் HND கற்கைநெறி தொடர்பான விளம்பரத்தினைப் பத்திரிகையில் பார்த்து நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு இக்கற்கைநெறி தொடர்பான பயனுள்ள பல விடயங்களை அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. உடனடியாக HND கற்கை நெறியில் இணைந்து கொண்ட நான் சரியாக 1½ வருட காலப்பகுதியில் HND கற்கைநெறியினை சிறப்பான முறையில் பூர்த்தி செய்து கொண்டேன்.

நிறுவனம் எமக்களித்த வாக்குறுதிக் கமைவாக இறுதியாண்டு பட்டக் கல்வியினை இங்கிலாந்து சென்று கற்பதற்காக கிறீன்விச் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்தேன். HND சான்றிதழ் சர்வதேச அங்கீகாரம் பெற்றது என்பதால் எனக்கு உடனடியாக இறுதியாண்டுப் பல்கலைக்கழக அனுமதியும் இங்கிலாந்து செல்வதற்கான ஏனையவும் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. எனக்கோர் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கித் தந்த IIS City Campus நிறுவனத்திற்கு நான் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன். குடாநாட்டில் இருக்கும் என் போன்ற மாணவர்களுக்கு IIS City Campus நிறுவனமும் அதன் HND கற்கைநெறியும் ஒரு மிகச்சிறந்த வரப்பிரசாதம் என்பதை எவரும் மறக்கமுடியாது.

BTEC HND
World Class

Delivered Locally....... Recognised Globally

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1½ years )

GCE A/L
with 2 Subjects

edexcel INTERNATIONAL
Approved Training Centre

## IIS CITY CAMPUS

# 200, Sivan Pannai Road, Jaffna
TP No. : 021 222 8060 Fax: 021 222 6933 Email: iiscc@sltnet.lk



# கலாலயா

பயிற்சியகம்
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [ பெருமாள் கோயிலுக்கு அண்மையில் ]

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

★ **3 மாத கால** கேக் ஐசிங், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம் Fabric Painting, பூ வேலை, கைவேலை பயிற்சிகள்.

மேற்படி பயிற்சிக்காலத்தின் நடுப்பகுதியில் **Facial** அழகுக்கலை நடைபெறும்.

★ **இருவார கால** சாறி பிளவுஸ், சுரிதார், Skirts தைத்தல்

(இப்பயிற்சிகளுக்கு இரு வாரங்களுக்கு ஒரு முறை புதிய அனுமதிகள் தொடர்ந்து வழங்கப்படும்)

★ புதிதாகத் தையல் பழக விரும்புவோருக்கான **6 மாத கால** தையல் வகுப்புகள்

தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் புதிய பிரிவுகளில் மேலும் மாணவிகள் அனுமதிக்கப்படுவர்

☞ மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப 1.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

பதிவாளர்.


# VACANCIES

**Applications are called from the suitable candidates for the following posts.**

**Office assistants:-** Educational Qualifications
GC.E (AIL) with knowledge in computer operation (MS Office)
Experience: - 3 years experience as a clerk from a reputed Establishment. Also should be able to handle Correspondence independently

**Technical Officer:-** NDT or equivalent with 5 years experience in the building Construction works

**Work supervisors :-** Educational qualifications :- G.C.E (A/L) with 2 years of work Experience In the building construction field

**Stores Assistant :-** Educational qualifications :- G.C.E (A/L)Experience: Should have minimum of 2 Years working experience in this field

**Accounts Assistants :-** Educational qualifications: - G.C.E (A/L) and full or part Qualified in accountancy (CIMA or ACCA)
And must be able to work with Peach Tree accounting Package.
Experience: - 3 years in the accounting field

**Logistician assistant :-** Qualification: - G.C.E (O/L) with 2 years experience in this field

**Please Note**

a) Closing date for the applications will be on 24.09.2007
b) All these appointments will be on a contract basis for a period of06 months (up to31.03.2008)
c) The applications of the Candidates who do not posses the required qualifications and experience will not be considered
d) Only the short listed candidates will be called for the interview.
e) Canvassing will be treated as a disqualification.
f) Your CV together with the copies of the certificates should reach us on or before 24.09.2007.

Regional Field Director
Northern Region 1
Sewa Lanka District Office
250, Temple Road, Nallur, JAFFNA

(c.53703)

# நெஞ்சகலா நினைவலைகள்

| ஒன்பதாம் ஆண்டு | முதலாம் ஆண்டு |
|---|---|





திருமதி தங்கேஸ்வரி கந்தசாமி
மண்ணில் 09.05.1932 விண்ணில் 30.06.1998
திதி: சப்தமி உத்தரம்

அமரர் ஆறுமுகம் கந்தசாமி
மண்ணில் 14.06.1928 விண்ணில் 29.08.2006
திதி: பூர்வபக்கசஷ்டி

நிலையில்லா இவ்வுலகில்
நிலைத்திருக்கும் உங்களுறவால்

நினைவிழக்க மாட்டாமல்
நீந்துகின்றோம் கண்ணீரில்

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

திருமதி ... குமாரி (ஆசிரியை),
... சம் றோட்,
வண்ணார் பண்ணை.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(64873)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## உலகுக்கு இப்போது உண்மை மெல்லப் புரிய ஆரம்பிக்கிறது

இலங்கையில் சிறுபான்மையினரான தமிழர்களுக்கு எதிரான அரச பயங்கரவாதம் எல்லை மீறுவது குறித்து தமிழர்கள் தொடர்ந்து குரல் எழுப்பி வருகின்றார்கள்.

அது சர்வதேசத்தின் காதில் இப்போது விழத் தொடங்கியிருக்கின்றது.

ஏற்கனவே லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மன்னிப்புச் சபை, அமெரிக்காவை மையமாகக் கொண்டு செயற்படும் மனித உரிமைகள் காப்பகம், ஆசிய மனித உரிமைகள் மையம், ஜெனிவா அழைப்பு அமைப்பு, சர்வதேச ஜூரர்கள் குழு போன்றவை தொடர்ந்து இலங்கை நிலைமை குறித்துப் பகிரங்க அறிக்கைகள் வெளியிட்டு வருகின்றன.

இந்நிலையில் மேற்குலக நாடுக்ள் பலவும் கூட தீர்க்கமான முடிவுகளை எடுக்கத் தொடங்கிவிட்டன.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களைத் தொடர்புபடுத்தி பிரிட்டன், ஜேர்மன், டென்மார்க் போன்றவை இலங்கைக்கான தமது உதவித்திட்டங்களை வெட்டிக் குறைத்துள்ளன. இந்த அணியில் சுவீடனும் இணைகின்றது என இப்போது செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இதேசமயம், இருபத்தியைந்து ஐரோப்பிய நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய ஒன்றியம், இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை அங்கு பிரசன்னமாகியிருந்து, கண்காணித்து, விசாரித்து, அறிக்கையிடுவதற்குத் தகுதியும் தகைமையு முடைய ஒரு சுயாதீன - சுதந்திர - கண்காணிப்புக்குழுவை ஐ.நா. அமைக்கவேண்டுமென ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலைக் கோருவது எனத் தீர்மானித்திருக்கின்றது.

இதேசமயம், உலகப் பெரு வல்லாதிக்க நாடான அமெரிக்காவும் இலங்கை அரசின் மனித உரிமை மீறல் போக்கைக் கண்மூடிப் பார்த்திருக்கத் தயாரில்லை என்பதைக் கோடி காட்டிவிட்டது.

இலங்கை அரசு தன்னைத் திருத்திக்கொள்ளாதவரை இலங்கைக்கான இராணுவ உதவித் திட்டங்களை முடக்க அமெரிக்கா தீர்மானிப்பது பெரும்பாலும் உறுதியாகி வருகின்றது எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சட்டத்துக்கு முரணான படுகொலைகள், சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தல் போன்ற மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் தனது படையினரை இலங்கைப் படைகள் சேவையிலிருந்து இடைநிறுத்தவும், இலங்கை அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவும் நடவடிக்கை எடுக்காதவரை -

இலங்கையில் தமிழ் மக்கள் வாழும்பிரதேசங்களுக்கு மனிதாபிமான உதவி நிறுவனப் பணியாளர்கள், ஊடகவியலாளர்கள் தாராளமாகச் சென்று வருவதற்கு இலங்கை அரசு அனுமதிக்காத வரை -

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கள அலுவலகம் ஒன்றை இலங்கையில் திறந்து செயற்பட இலங்கை அரசு அனுமதிக்காத வரை -

இலங்கைக்கு அமெரிக்காவின் எத்தகைய வெளிநாட்டுப் படைத்துறை நிதி உதவித்திட்டத்தின் கீழும் உதவிகள் ஏதும் வழங்கப்படக்கூடாது என்று அமெரிக்க செனட்சபை தீர்மானித்திருக்கின்றது. அமெரிக்க நாடாளுமன்றம் இன்னும் இத்தகைய தீர்மானம் ஒன்றை எடுக்கவில்லை. ஆனால் நாடாளுமன்றமும் இத்தகைய தீர்மானத்துக்கு வருவதற்கான சாத்தியங்கள் தென்படுகின்றன.

அங்கும் இது நிறைவேற்றப்பட்டு, அந்தப் பின்னணியில் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும் இந்த நகர்வுக்குப் பச்சைக்கொடி காட்டுவாரேயானால், இலங்கையின் கதி அதோ கதிதான். மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு அது ஒரு பேரிடியாக அமையும்.

அப்படியாகுமானால் -

படைத்துறையில் அமெரிக்க - இலங்கைக் கூட்டுச் செயற்பாடுகள், இராணுவப் பயிற்சிகள் இனி இடம்பெறா. மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களை இலங்கைக்கு அமெரிக்கா வழங்காது. ராடர்கள், எதிரிகளின் சூட்டுத் தாக்குதல்கள் புறப்படும் இடங்களைக் கண்டறியும் கருவிகள், இரவு நேரத் தாக்குதல் கருவிகள், கரையோரப் பாதுகாப்புப் படகுகள், அவற்றுக்கான உபகரணங்கள், இலங்கை அரசின் அதிக பாவனையில் உள்ள ஸி - 130 ரக 'ஹெர்குலஸ்' போக்குவரத்து விமானங்கள் மற்றும் 'பெல்' ஹெலிக்கொப்டர்கள் போன்றவற்றுக்கான உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், கருவிகள் எவையும் இலங்கைக்கு வாங்க முடியாமல் போகும்.

விடுதலைப் புலிகளை அடக்குவதற்கான உத்தி என்ற பெயரில் தமிழர் தாயகத்தின் மீது மிகக் கொடூரமான அரச ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரரான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவும், கைகட்டிச் சிரித்துக்கொண்டு பார்த்திருப்பதை சர்வதேச சமூகம் இனிமேலும் பொறுமையுடன் சகித்துக்கொண்டு வாளாவிருக்காது என்பதை அரசுத் தலைமை காலம் பிந்தியாவது உணர்ந்து கொள்ளும் கட்டாயம் அத்தலைமைக்கு மெல்ல மெல்ல ஏற்பட்டு வருகின்றது.

தமிழர் தாயகத்தில் இனந்தெரியாதோர் மேற்கொள்ளும் படுகொலைகள், காணாமற் போகச் செய்தல், ஆள்கடத்தல்கள், அச்சுறுத்தல்கள் என்ற கணக்கில் காட்டப்படும் மனித உரிமை மீறல்களுக்கு ஆட்சிப் பொறுப்பில் இருப்போரே பொறுப்பேற்க வேண்டிய யதார்த்த நிலை வெளிப்பட்டு வருகின்றது.

'புலிப் பயங்கரவாதம்' குறித்து அளவுக்கு மீறி ஆரவாரப்படுத்திக் கொண்டிருந்த உலகம், இப்போது உண்மையை உணர்ந்து 'அரச பயங்கரவாதம்' குறித்து ஆராயத் தலைப்பட்டிருப்பது நல்ல சமிக்ஞை. உண்மை தெளிவாகும்போது தமிழர் மேற்கொள்வது 'பயங்கரவாதம்' அல்ல 'விடுதலை வேள்வி' என்பதும், கொழும்பு நடத்துவது சட்டத்தின் ஆட்சியல்ல, காட்டுத் தர்பார் என்பதும் உலகுக்கு நன்கு தெரியவரும். அதற்கான ஆரம்ப அறிகுறிகளே இப்போது தென்படுகின்றன.

# கிழக்கை அபிவிருத்தி செய்ய உதவி 45 நாடுகளிடம் கோருகிறது அரசு

கொழும்பு,செப்.17

விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து கிழக்கை முற்றாக மீட்டுவிட்டதாகக் கூறும் இலங்கை அரசு, அதை அபிவிருத்தி செய்வதற்காகவும் அப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் 45 நாடுகளிடமிருந்து நிதி உள்ளிட்ட பல உதவிகளைப் பெறவும் தீர்மானித்திருக்கின்றது.

அந்த நாடுகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 'கொன்சியுலர்' பிரதிநிதிகளின் ஊடாக இந்த உதவிகளைத் திரட்ட இலங்கை வெளிவிவகார அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இப்பிரதிநிதிகளின் ஊடாக கிழக்கில் மேற்கொள்ளவுள்ள அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் சமாதான நடவடிக்கைகள் போன்றவற்றை அந்தந்த நாடுகளுக்குத் தெளிவுபடுத்தி, அந்த நாடுகளிடமிருந்து தேவையான உதவிகளைப் பெற வெளிவிவகார அமைச்சு முயற்சியில் இறங்கியுள்ளது என்று அறியமுடிகின்றது.

இது விடயம் தொடர்பாக 45 நாடுகளுக்கான இலங்கை கொன்சியுலர் பிரதிநிதிகளுடன் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம கடந்த வெள்ளிக்கிழமை தனது அமைச்சின் கேட்போர் கூடத்தில் சந்திப்பொன்றை நடத்தினார். அச்சந்திப்பில் அமைச்சர் கூறியவை வருமாறு:-

கிழக்கைப் புலிகளிடமிருந்து மீட்டெடுத்த அரசு அங்கு பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் பொருளாதார ரீதியாக அவர்களுக்கெனப் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டு வருகின்றன.

பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் அதேவேளை சமாதானத்தின் மூலம் தேசியப் பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான தீர்வை முன்வைக்கவும் அரசு தயாராகவுள்ளது.

புலிகள் அமைப்பில் தமிழர்கள் தான் இருக்கின்றார்கள். ஆனால், அனைத்துத் தமிழர்களும் புலிகள் அல்லர். தமிழர்கள் அனைவரும் புலிகளுக்கு ஆதரவு வழங்குவதில்லை. தமிழர்களும் இந்நாட்டு மக்கள்தான். இந்த நிலைப்பாட்டில் அரசு மிகவும் உறுதியாகவுள்ளது.

யுத்தம் என்று ஒன்றில்லை

தமிழர்களின் பிரச்சினைக்குத் 'தீர்வு காண்பதிலும் அவர்களைப் புலிகளின் பயங்கரவாதப்பிடியில் இருந்து விடுவிப்பதிலும் அரசு தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்படும்.

சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருவதைத் தடுத்து, இலங்கையின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்யும் தீய நோக்கில் சில சக்திகள் செயற்பட்டு வருகின்றன. இச்சக்திகளும் பொய்ப்பிரசாரங்களும் தடுக்கப்படவேண்டும்.

இலங்கையில் யுத்தம் ஒன்றில்லை. பயங்கரவாதச் செயற்பாடுகளைத் தோற்கடிக்கும் நடவடிக்கைதான் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது என்ற உண்மை அனைத்து நாடுகளுக்கும் பரப்பப்படவேண்டும்.

கிழக்கின் அபிவிருத்திக்கும் சமாதான முயற்சிக்கும் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பு அவசியம். அரசு மேற்கொண்டுவரும் இவை தொடர்பான நடவடிக்கைகளுக்கு உங்கள் நாடுகள் ஒத்துழைப்பு வழங்கும் வகையில் இந்நடவடிக்கைகள் பற்றி உங்கள் நாடுகளுக்கு நீங்கள் எடுத்துரைக்க வேண்டும் - என்று கூறியுள்ளார்.

(சி)

## நெல் சேமிக்கும் உரப்பைகள் இன்று விநியோகம்

வலி தென்மேற்கு,செப்.17

செஞ்சிலுவை சர்வதேசக்குழு, மாதகல் பகுதியிலுள்ள வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள நெல் வேளாண்மையில் ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்கு, நெல் சேமித்து வைப்பதற்கும் பயன்படுத்துவதற்குமாக பெரிய அளவிலான உரப்பைகளை வழங்கவுள்ளது.

மாதகல் விவசாயிகள் சம்மேளனத்திற்கு ஊடாக ஐந்நூறு பெரிய உரப்பைகள் இன்று 17ஆம் திகதி வழங்கப்படவுள்ளன. (அ-135)

## விசேட அதிரடிப்படையினர் மீது கஞ்சிகுடிச்சாறில் தாக்குதல்!

### சிப்பாய் பலி; அதிகாரி படுகாயம்

மட்டக்களப்பு,செப். 17

அம்பாறை மாவட்டத்தின் கஞ்சிகுடிச்சாறு காட்டுப்பகுதியில் விசேட அதிரடிப்படையினருக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் அதிரடிப்படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் அதிரடிப்படை அதிகாரியொருவர் படுகாயமடைந்துள்ளார்.

திருக்கோவில் விசேட அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த வசந்த விஜயரத்ன (வயது - 35) என்பவரே இச்சம்பவத்தில் பலியாகியுள்ளார் என விசேட அதிரடிப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பிரதம இன்ஸ்பெக்டர் ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக அம்பாறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை கஞ்சிகுடிச்சாறு காட்டுப்பகுதிக்குள் சென்ற விசேட அதிரடிப்படையினர் அங்கு தேடுதல் நடவடிக்கை யில் ஈடுபட்டிருந்தபோதே புலிகள் பதுங்கியிருந்து இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இந்தச் சம்பவத்தின்போது தாம் மேற்கொண்ட பதில் தாக்குதலில் புலிகள் தரப்பிலும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன என அதிரடிப்படையினர் அறிவித்துள்ளனர்.

கஞ்சிகுடிச்சாறு காட்டுப்பகுதிக்குள் சென்றுள்ள அதிரடிப்படையினர் அப்பகுதியில் தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## தொப்பிகலவில் தொடர்ந்தும் ஆயுதத் தளபாடங்கள் மீட்பு!

மட்டக்களப்பு,செப்.17

மட்டக்களப்பு மாவட்டத்தின் தொப்பிகல தாராவில் பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது பெருமளவிலான ஆயுதங்களும் வெடிபொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் படையினர் அறிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை தொடக்கம் நண்பகல் வரை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது கிளைமோர் குண்டுகள், ரி - 56 ரகத் துப்பாக்கிகள், தொலைத் தொடர்புக் கருவிகள் மற்றும் வெடிமருந்துகள் என்பன மீட்கப்பட்டுள்ளன எனப் படையினர் தெரிவிக்கின்றனர்.

தொப்பிகல பிரதேசத்தைக் கைப்பற்றியுள்ள பாதுகாப்புப் படையினர் அப்பகுதியில் தொடர்ந்தும் தீவிர தேடுதல்களை மேற்கொண்டு வருகின்றனர். இதன்போது புலிகளால் கைவிட்டுச் செல்லப்பட்ட ஆயுதங்களைப் படையினர் மீட்டு வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, இப்பிரதேசங்களில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளிலும், வயல் நிலங்களிலும் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அறிவிக்கப்படுகிறது.

கண்ணிவெடி அகற்றும் பணி பூர்த்தியடைந்ததும் இப்பகுதியில் மக்களை மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(சி)

### நாளை

| | |
|---|---|
| புரட்டாதி - 1 | செவ்வாய்க்கிழமை 18.09.2007 |
| திதி : | ஸப்தமி முழுவதும் |
| நட்சத்திரம் : | அனுசம் பி.ப. 01.25 |
| [illegible]நேரம் | : 10.33 - 12.03 |
| [illegible] | : 03.03 - 04.33 |

## 'மிக் - 27' ஜெட் கொள்வனவு ஊழல்: விமானப்படையின் உயரதிகாரிகள் நால்வரிடம் விரிவான விசாரணை

கொழும்பு,செப். 17

'மிக் - 27' ரக தாக்குதல் விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்ட விடயத்தில் பெரும் ஊழல், மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்று கூறப்படும் முறைப்பாடு தொடர்பாக விமானப் படையின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த நான்கு உயரதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

இலஞ்சத் தடுப்புத் திணைக்களம் இந்த அதிகாரிகளிடம் விசாரணை நடத்தி அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்திருக்கின்றது எனக் கூறப்படுகின்றது.

ஏயார்வைஸ் மார்ஷல் ஒருவர், விங் கமாண்டர் ஒருவர், குறூப் கப் டன் தர அதிகாரிகள் இருவர் என இந்தக் கொள்வனவு விடயத்தில் சம்பந்தப்பட்ட நால்வரே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் என லஞ்சத் தடுப்பு ஆணைக்குழுவின் விசாரணைப் பிரிவு இயக்குநர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் குருகே தெரிவித்தார்.

மேற்படி விமானக் கொள்வனவுப் பேரம் தொடர்பான விவகாரங்கள் விவரமாக விசாரிக்கப்பட்டமையுடன், அக்கொள்வனவோடு சம்பந்தப்பட்ட முக்கிய ஆவணங்களும் தங்களால் கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்று மேலும் தெரிவித்த அவர், தேவைப்படும் மேலதிக ஆவணங்களும் கூடப் பொறுப்பேற்கப்படும் என்றும் கூறினார்.

விசாரணைகளின் போக்கைப் பொறுத்து, கொள்வனவு நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக, அந்த விமானங்களை விற்ற உக்ரைன் நாட்டுக்கும் செல்லவேண்டி நேரலாம் என்றும் அவா குறிப்பிட்டார்.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ருவன்ரி/20' கிரிக்கெட் போட்டியின்போது தென்னாபிரிக்கத் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, செப். 17

தென்னாபிரிக்காவின் ஜோஹனெஸ் பேர்க் நகரில் இலங்கை-நியூசிலாந்து அணிகளுக்கிடையே இருபது/20 அனைத்துலகக் கிரிக்கெட் போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதன்போது இலங்கை அரசைக் கண்டித்து அங்கு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக அரசினால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம்நடத்தப்பட்டது. இலங்கை மனித உரிமை மீறல்களை அனைத்துலக சமூகத்துக்கும் வெளிப்படுத்தும் நோக்கில் தென்னாபிரிக்க தமிழ் மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை ஒருங்கமைத்திருந்தனர்.

இலங்கை மீது பொருளாதாரத் தடையை மேற்கொள்ளவேண்டும் என்றும்-அனைத்துலக தரத்திலுள்ள அனைத்து விளையாட்டுப்போட்டிகளிலும் இருந்து இலங்கையை தனிமைப்படுத்தக்கோரியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்-என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-9)

# மக்களை விழித்தெழச் செய்யும் ஐ.தே. கட்சியின் போராட்டம்

## நேற்று குருநாகலில் ஆரம்பம்

கொழும்பு,செப்.17

அரசுக்கு எதிராக சாதாரண பொதுமக்களை விழித்தெழச் செய்யவும்- அவர்களுக்குத் தெளிவுபடுத்தவும் ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான முதற்பணி நேற்றுக் குருநாகலில் ஆரம்பித்துவைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கை நேற்றுத் தொடக்கம் அடுத்தமாதம் 16ஆம் திகதி வரை வாராந்த சந்தைகளில் நடைபெறவுள்ளது. இவை 400 இடங்களில்மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் குருநாகல் மேல் ஸ்ரீபுர நகரிலும் மற்றும் வாரச் சந்தையிலும் நடைபெற்ற பிரதான எதிர்ப்பு நடவடிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கூட்டம் கூட்டமாகச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சியினர் துண்டுப்பிரசுரங்களையும் விநியோகித்தனர்- எனக் கூறப்பட்டது.






இலங்கை அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தென்னாபிரிக்கத் தமிழ் மக்கள்...

## கே.பியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், இந்தச் செய்தி ஊடகங்கள் பீற்றர் இப்ராகீம் என்ற பெயரைத் தமது செய்திகளில் தவிர்த்திருந்தன. இதனைத் தொடர்ந்து தாம் பத்மநாதனை கைது செய்யவில்லை என தாய்லாந்து அதிகாரிகள் மறுத்திருந்தனர்.

பத்மநாதனை விசாரிக்கவும், முடிந்தால் இலங்கைக்க் கொண்டுவரவும் இலங்கை பொலிஸ்துறையைச் சேர்ந்த இரு மூத்த உதவி பொலிஸ் ஆணையாளர்களும், மேலதிக வெளிவிவகாரச் செயலாளரும் தாய்லாந்து சென்றிருந்தனர்.

எனினும், இவர்களின் வருகையை தாய்லாந்து அரசு ஊக்குவிக்காத போதும், அவர்கள் தாய்லாந்துக்கு தாமாகவே சென்றிருந்தனர். தற்போது அங்கு எதுவித முன்னேற்றமும் அற்ற நிலையில் அதிகாரிகளின் குழு, கடந்த வெள்ளிக்கிழமை இரவு இலங்கை திரும்பியுள்ளது எனக் கூறப்படுகின்றது. (க-9)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் தொடர்ச்சியாக இலங்கையில் பெரிய அளவில் நிலநடுக்கம் ஏற்படும் சாத்தியம் அதிகம் உள்ளதாக புவியியல் ஆய்வு நிலை நிபுணர் கலாநிதி நாயகே தெரிவித்துள்ளார். இந்த நிலநடுக்கம் சக்தி வாய்ந்ததாக இருக்கலாம் . பெரிய அளவில் சேதம் ஏற்படும் அபாயம் உள்ளது என்றும் அவர் எச்சரித்திருக்கிறார். (அ)

## இயலுமானால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றியை நிரூபித்துக் காட்டவுள்ளோம். இவ்விடயத்தில் எமது அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உறுதியாக இருக்கின்றனர்.

ஒருபோதும் வளைந்து கொடுக்காத நிலைப்பாட்டில் நம்மவர்கள் உள்ளனர் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. எம்மிலிருந்து எவரையும் பணம் கொடுத்து ஒருபோதும் வாங்கிவிடமுடியாது. இவ்வாறு பணம் கொடுத்து வாங்கக்கூடிய அமைச்சர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ எமது அரசில் இல்லை- என்றார் ஜனாதிபதி. (சி)

# தகவல் பூங்காவில் பயிற்சி பெற்றோரின் சான்றிதழ்கள் வந்துள்ளன

யாழ்ப்பாணம்,செப்.17

கடந்த வருடம் ஜூன் மாதம் இறுதி வரை தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்தவர்கள், தங்களுக்குரிய சான்றிதழ்களை நாளை செவ்வாய்கிழமை தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பக் பூங்காவில் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் அமைச்சில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளதாக பூங்கா அதிகாரி அறிவித்துள்ளார். சம்பந்தப்பட்ட மாணவர்கள் தமது அடையாள அட்டையுடன் சமுகம்ளித்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# மாநகரசபைக்குள் புகுந்த கோஷ்டி ஊழியர்களைத் தாக்கியது இருவர் காயமுற்று ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், செப்.17

யாழ். மாநகரசபைக்குள் நேற்று மாலை 6 மணிக்கு புகுந்த கோஷ்டி ஒன்று தாக்குதலில் ஈடுபட்டதில் இருவர் காயமடைந்தனர்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த மாநாகர சபையின் சாரதியான எஸ். விஜயகுமார் (வயது 22 - அரசடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்), ஏ.கிஷோக்குமார் (வயது 22- நல்லூர்) ஆகியோர் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நல்லூர் கந்தசாமி ஆலய தீர்த்தத் திருவிழாவில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றின் எதிரொலியாக இத்தாக்குதல் இடம் பெற்றதாக சொல்லப்படுகிறது. (அ-1-78)

# தெஹிவளை, கம்பஹாவில் சனியன்று 56 பேர் கைது

கொழும்பு, செப். 17

தெஹிவளை மற்றும் கம்பஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பொலிஸாரும் படையினரும் இணைந்து மேற்கொண்ட தேடுதலின்போது 56 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு தொடக்கம் நேற்று அதிகாலை வரை இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் பொலிஸாரும் இராணுவத்தினரும் சேர்ந்து நடத்திய தேடுதலின்போது 39 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## விமானம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விமானம் சென்றதாகவும் பயணிகளில் அரைவாசிக்கும் அதிகமானோர் வெளிநாட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தலைநகர் பாங்கொக்கிலிருந்து உல்லாசப் பிரயாண பிரதேசமான புக்கட் தீவுக்கு 'வன் - டூ கோ' என்ற குறைந்த கட்டண தனியார் நிறுவன விமானம் சென்றது. இந்த விமானத்தில் 123 பயணிகளும் ஐந்து ஊழியர்களும் பயணம் செய்தனர்.

விபத்தில் உயிரிழந்தோரின் சரியான எண்ணிக்கையை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை என்று தாய்லாந்து அதிகாரிகள் நேற்றிரவு தெரிவித்தனர். (அ-5)

## யாழ்ப்பாணத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் எனக் கூறப்பட்டது.

இது தொடர்பாக கடந்த ஏழு மாதங்களுக்கு முன்பே பிரதமரைச் சந்தித்து கோரிக்கை விடுத்தோம். பிரதமரும் அதற்கான அனுமதியை வழங்கினார்.

ஆனால் தற்போது உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் அனுப்ப அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. தடுத்தது யார்?

இந்தச் செயல் தமிழக மக்களுக்கு, மத்திய அரசு செய்யும் மிகப் பெரிய துரோகம் ஆகும். இந்தத் துரோகத்துக்கு மத்திய அரசில் இடம்பெற்றுள்ள தி.மு.க.வும் துணை போகிறது - என்று கூறினார் வைகோ. (அ)

## வடக்கு - கிழக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் இணைக்க வழி செய்யும் விதத் தில் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும் அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவைப்படுகிறது. அதனைப் பெற்றுக் கொள்வதற்காக இந்நாட்டு அரசியல் தலைவர்களுடன் நேரடியாகப் பேசுவதற்கு இந்தியா கடந்த வாரம் தீர்மானித்துள்ளதாக தூதரக வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இந்தியாவுக்கு வருமாறு இந்தியஅரசு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அவசரமாக அழைப்பு விடுத்தது. இது தொடர்பாக இந்தியத் தலைவர்களுக்குத் தேவையான அடிப்படை ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவே அந்த அழைப்பு எனவும் அறியக் கிடைக்கிறது.

புதுடில்லிக்குச் சென்ற முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அங்கு இந்தியப் பிரதமர், வெளிவிவகார அமைச்சர், வெளிவிவகாரச் செயலாளர் ,தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மற்றும் காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி ஆகியோரையும் சந்தித்துள்ளார்.

### எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பு பெறப்படும்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் புதுடில்லிவிஜயத்திற்கு பின்னர் ஐ.நா. கூட்டத்துக்காக நியூயோர்க் செல்லவுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், அங்கு இலங்கை ஜனாதிபதியுடன் இவ்விடயம் தொடர்பாக விரிவான பேச்சு நடத்தவுள்ளார் எனவும் தெரியவருகிறது.

இவ்விடயத்தில் பிரதான எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு இந்திய அரசு, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோருடன் தனித் தனியாகப் பேசும் எனத் தெரிய வருகிறது.

இந்தியத் தலைவர், ஐ.நா. கூட்டத்துக்குப் போய் வந்தவுடன், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு அழைக்கப்படவுள்ளார். அதன் பின்னர் ஏனைய கட்சித் தலைவர்களும் அந்நாட்டுக்கு அழைக்கப்படுவரென தூதரக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

- இப்படி அந்தச் செய்தி மேலும் தெரிவித்தது. (சி)

பெருமையுடன் அறியத்தருகிறோம்!!
மானிப்பாயில் முதன் முதலில் சர்வதேச தரம் வாய்ந்த கணனிக் கல்வி சான்றிதழ் !!
(வெகுவிரைவில் கணனிப் பட்டப்படிப்புக்களும் ஆரம்பமாக உள்ளன !!)
The SriLankan Offshore Campus of The Trinity College and University - USA
LUX EX TENEBRIS
எமது நிறுவனத்தால் வழங்கப்படும் கணனிக் கல்வி சான்றிதழ்கள் யாவும் மேற்குறிப்பிட்ட சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ்களாகும் என்பதை அனைவருக்கும் பெருமையுடன் அறியத்தருகிறோம் !!
A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான Batch - 05 (இறுதிப்பிரிவு) ஆரம்பமாகவுள்ளதால் மாணவர்கள் 20.09.07கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.
மேலதிக விபரங்களுக்கு :-
UNI TECHNOLOGY
Manipay T.P:- 0777-110862
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)

CHEMISTRY
2009 A/L
வெப்ப இரசாயனம்
தி.,செ.,பு 6.00. 7.30 a.m
DIAS B.sc (hons) Spl
College of Chemistry

# இலங்கைக்கான இராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேறுபாடுகளுக்கு செனெட் மற்றும் நாடாளுமன்ற கூட்டத்தில் தீர்வு காணப்படும் என்று சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கூட்டத்தில் பங்குபற்றும் ஏழு உறுப்பினர்கள் கொண்ட செனேட் சபையின் குழுவிற்கு சென்ற்றா லியகி தலைமை வகிப்பதுடன், நாடாளுமன்றக் குழுவிற்கு நாடாளுமன்றத்தின் வெளிவிவகார உபகுழுவின் தலைவரான நீற்றா லோவ்வி மற்றும் பிராங் வுல்ப் ஆகியோர் தலைமை தாங்குகின்றனர்.

### இலங்கைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள்

அமெரிக்க அரசின் இந்த தீர்மானத்தின் பிரகாரம் இலங்கைக்குப் பாதுகாப்பு ஏற்றுமதி அனுமதிகள், இராணுவ உபகரணங்கள், தொழில்நுட்பங்கள் வழங்கல் என்பன மேற்கொள்ளப்பட முடியாதவையாகிவிடும்.

இத்தடைக்கான நிபந்தனையாக இலங்கையில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள், சிறார் படைச் சேர்ப்பில் படையினரின் தொடர்புகள், நீதிக்குப் புறம்பான படுகொலைகள் போன்றவற்றிற்கு காரணமானவர்களை நீதிக்கு முன் நிறுத்தவேண்டும் என்பது அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

செனெட் சபையினால் அனுமதியளிக்கப்பட்ட 690ஆவது பிரிவின் முழு விவரம் வருமாறு:-

பாதுகாப்பு ஏற்றுமதிக்கான அனுமதி, இராணுவ உபகரணங்கள், படைத்துறைத் தொழில்நுட்பங்கள் போன்ற வெளிநாட்டிற்கான அமெரிக்காவின் இராணுவ உதவிகள் இலங்கைக்கு பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் நிறுத்தப்பட உள்ளன.

இதற்குரிய நிபந்தனைகளாக பின்வரும் மூன்று விடயங்கள் விதிக்கப்பட்டுள்ளன. அவற்றை இலங்கை அரசு நிறைவேற்றியுள்ளதாக அமெரிக்க வெளிவிவகார செயலாளர் உறுதிப்படுத்தவும் வேண்டும்.

1) மனித உரிமை மீறல்கள், நீதிக்கு புறம்பான படுகொலைகள், சிறார் படைச் சேர்ப்பு போன்றவற்றைப் படையினர் நிறுத்த வேண்டும். இத்தகைய மனித உரிமை மீறல்களுக்குக் காரணமானவர்களை இலங்கை அரசு நீதிக்கு முன் நிறுத்தவேண்டும்.

2) இலங்கையின் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு மனிதாபிமான உதவி நிறுவனப் பணியாளர்கள், ஊடகவியலாளர்கள் செல்வதற்கு அனுமதிக்கவேண்டும்.

- இவையே அந்த நிபந்தனைகளாகும். (சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதியில் 3[illegible] இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.09.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org